1994 ஏப்ரல் 5] [திரு. ஏ. எம். பரமசிவன்]

அறியப்படுகிறது. நிர்வாகத்தினர் தங்களுடைய 4-4-1994 ஆம் நாளிட்ட கடிதத்தில் தொழிற்சங்கத்தின் செயல் தலைவர் திரு. குப்புகண்ணன் என்பவர் 1-4-1994 ஆம் நாள் தொழிற்சாலையிலிருந்து கேஸ் சிலிண்டர்களை வெளியே நிர்வாகத்தினர் அனுப்பியதை ஆட்சேபணை செய்ததாகவும் கூறியுள்ளது. மேலும், இந்த தொழிற்சங்க செயல் தலைவருக்கும் நிர்வாகத்தின் துணைத் தலைவர் (உற்பத்தி) திரு. மேனனுக்கும் தகராறு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பைக் காரணமாகக் காட்டி 1-4-1994 ஆம் நாள் முதல் இத்தொழிற் சாலையில் கதவடைப்புச் செய்துள்ளதாக நிர்வாகம் கூறியுள்ளது. எனவே, இது குறித்து தொழிலாளர் ஆணையர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், நிர்வாகத்தினரையும் அழைத்து 8-4-1994 ஆம் நாள் பேச்சுவார்த்தை நடத்துவார் என்பதைத் தெரிவித்து, இதைப் பேரவைக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

7. விதி 111-ன்கீழ் உணவு அமைச்சரின் அறிக்கை

4-4-1994 அன்று ஆற்றிய உரையில் திருத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 111-ன்கீழ் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிக்க வேண்டும் என்று அனுமதி கோரி இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இப்போது அந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்த அறிக்கை. 4-4-1994 அன்று மானியக் கோரிக்கை எண் 34-ன் மீது நடந்த விவாதத்துக்குப் பதில் அளிக்கும்போது, பொது விநியோகத் திட்டத்தில் விற்கப்படும் அரிசியின் விலை உயர்வைப் பற்றி நான் சில கருத்துக்களைச் சொன்னேன். அப்போது நான் அப்பேச்சில் சில பகுதிகளில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற முதல் இரண்டு ஆண்டுக் காலத்தில், மத்திய அரசு சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்திய போது தமிழகத்தில் உயர்த்தவில்லை; மூன்றாவது ஆண்டான இந்த ஆண்டு தான் வேறு வழியின்றி உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று பொருள்பட சில கருத்துக்களைச் சொன்னேன். இது சரியான தகவல் அல்ல. இதன் சரியான விவரம் பின்வருமாறு:

மத்திய அரசு 28-12-1991 முதல் அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு 88 காசுகள் வீதம் உயர்த்தியபோது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சாதாரண ரக அரிசியின் விலையை மட்டும் உயர்த்தவே இல்லை. ஆனால், மறுபடியும் 11-1-1993 அன்று. மத்திய அரசு அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு 60 காசுகள் வீதம் உயர்த்தியபோது மட்டுமே, சாதாரண ரக அரிசி உட்பட எல்லா ரக அரிசியின் விலையையும் தமிழக அரசு கிலோ ஒன்றுக்கு 50 காசுகள் வீதம் 1-3-1993 முதல் உயர்த்தி இறுதியாக நிர்ணயித்தது. எனவே, 4-4-1994 அன்று நான் பேரவையில் நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) கரூர் பகுதியில் நெசவாளர் தொடர் போராட்டங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா, இருக்கையில் இல்லை, ஆகவே அவருக்குப் பதிலாக டாக்டர் சு. மணிமேகலை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆனால் அவர் இதில் கேள்வி கேட்க முடியாது. அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திருமதி மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரிலும், கரூர் அதன் சுற்றுப் பகுதியிலும் நெசவாளர்கள் நடத்தும் தொடர் போராட்டங்களினால் ஏற்படடுள்ள பாதிப்பு" குறித்த அவசரப் பொது முக்கியவத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நாடு முழுவதும் பஞ்சு விலையேற்றத்தின் காரணமாக நூலின் விலை உயர்ந்துள்ளது. தனியார் நெசவாளர்களுக்கும் நூல் தாராளமாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS